மாபெரும் யூபிலி

கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும்

2000

## மூவொரு இறைவனின் உறவில் இணைவோம்

# தொண்டன்

ஆரம்பம் . பெப்ரவரி 1969

பெப்ரவரி - 2000 ---- 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பக்கம்

### அற்புதம்!

இவன் ஓர் அற்புதக் கவிஞன் என்ற தலைப்போடு வெளிவந்துள்ள "நான் என்னைத் தேடுகிறேன்" கவிதை நூல் விமர்சனத்தில் மிகத்தெளிவாக ஒவ்வொரு அம்சமாக விமர்சித்த அன்புமணி ஐயா அவர்கள் ஓர் அற்புத விமர்சகர் என்றால் மிகையாகாது.

அ. கலிஸ்ரா
கல்லடி
மட்டக்களப்பு.

### கடி! கடி!

கிறிஸ்மஸ் சிறப்பிதழ் மிகவும் நன்றாக இருந்தது. நிறைய விடயங்களைச் சேர்த்து, பக்கங்களை அதிகப்படுத்தி......... விலையைக் கூட்டாதது ஆச்சரியந்தான்....... அது சரி கையைக் கடித்திருக்குமே!

ஜீவரஞ்சன்
கொழும்பு-06

*கையை மட்டுமல்ல காலையும் சேர்த்துக் கடித்து விட்டது.*
(இ.ஆ)

## அடுத்த இதழில்!



திருகோணமலை – மட்டக்களப்பு மறை மாவட்ட அன்பியம் பொறுப்பாளர் அருள்திரு பிரான்சிஸ் சேவியர் டயஸ் அவர்களுடன் இடம்பெற்ற நேர்காணல்.

அன்பியம் தொடர்பான பல்வேறு வினாக்களுக்கும், சந்தேகங்களுக்கும் பதிலளிக்கிறார் பொறுப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

பெப்ரவரி - 2000

மலர் 32 — இதழ் 01

ஆசிரியர் :
A. தேவதாசன்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

துணை ஆசிரியர் :
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி :
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44,
BATTICALOA. 30000
Tel: 065-22723

விலை: 12/-

ஆண்டுச் சந்தா: 140/-
(தபாற்செலவு உட்பட)



உள்ளே.........

| | | |
|---|---|---|
| 1. | இதயந் திறந்து | ... 02 |
| 2. | எப்படி... எப்படி... | ... 03 |
| 3. | வாழ்க்கை | ... 05 |
| 4. | அன்பியங்களின் | ... 07 |
| 5. | மடுத்திருப்பதியில் | ... 08 |
| 6. | கலை இலக்கிய மஞ்சரி | ... 09 |
| 7. | பல்சமய உரையாடல் | ... 10 |
| 8. | புலரா ஆண்டு | ... 13 |
| 9. | நமது கலைஞர்கள் | ... 16 |
| 10. | திருமணமும் | ... 17 |
| 11. | வாய்மொழிப் பாடல் | ... 19 |
| 12. | திருச்சபைச் செய்திகள் | ... 20 |
| 13. | வானம்பாடி | ... 22 |
| 14. | விவிலிய பொது அறிவு | ... 23 |
| 15. | போட்டு முடிவுகள் | ... 24 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இதயந் திறந்து............

புத்தாண்டு
புதிய சகாப்தம்
பிறந்து விட்டது.
புதிய எண்ணங்கள், புதிய செயற்பாடுகள்
தோன்றுவது சகஜம்தானே
சமூகத் தொடர்பு ஆணைக்குழுவிலும்
புதியன தோன்றின
திருமலை, கல்முனை, மட்டுநகர் கோட்டங்களை
உள்ளடக்கிய
ஒரு குழு கூட்டப்பட்டு பணிகளைப் பரவலாக்கவும்,
ஆழப்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இதனால் இலைமறை காயாக இருக்கின்ற
பலரது திறமைகள் வெளிக்கொணரப்படவும்
பலரது ஆக்கங்கள் பிரசுரிக்கப்படவும்
வழிசமைக்கப்படுகின்றன.
எனவே நிலையத்தால் எடுக்கப்படும் புதிய
முயற்சிகளோடு
கலை ஆர்வம், எழுத்தாற்றல் கொண்டவர்கள்
சேர்ந்து செயற்பட்டு
சமூகத் தொடர்புத் துறையில்
புதியன செய்யப் புறப்படுவோம்.

★ ஆசிரியர்

---




யாழிசைத்து ஆண்டவருக்கு
நன்றி செலுத்துங்கள்!
புத்தம் புதுப் பாடல் ஒன்றை
அவருக்குப் பாடுங்கள்.
33 : 2, 3.

# எப்படி......... எப்படி.........?

கடற்கரையில் எத்தனையோ அலைகள்
கரையைத் தழுவுகையில்
'நீ' என்னும் அலைக்குள்
நானும் ஒரு துரும்பாக
அடித்துச் செல்லப்பட்டதெப்படி?

வானத்தில் எத்தனையோ மேகக்கூட்டங்கள்
திரள் திரளாக அலைகையில்
'நீ' என்னும் மேகத்திற்குள்
நானும் ஒரு மழைத்துளியாய்
கலந்து போனதெப்படி?

தோட்டத்தில் எத்தனையோ பூஞ்செடிகள்
வித விதமாய் பூக்கையில்
'நீ' என்னும் பூவிற்குள்
நானும் ஓர் இதழாக
மலர்ந்ததெப்படி?

வான் வெளியில் எத்தனையோ பறவைகள்
கூட்டம் கூட்டமாய்ப் பறக்கையில்
'நீ' என்னும் பறவைக்குள்
நானும் ஒரு சிறகாக
முளைத்ததெப்படி?

ஊருக்குள் எத்தனையோ நதிகள்
பெருக்கெடுத்து ஓடுகையில்
'நீ' என்னும் நதிக்குள்
நானும் ஓர் ஓடையாக
சங்கமித்ததெப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனாந்தரத்தில் எத்தனையோ மரங்கள்
வகை வகையாய் வளர்கையில்
'நீ' என்னும் மரத்திற்குள்
நானும் ஒரு கிளையாக
முளைவிட்டதெப்படி?

ஆகாயத்தில் எத்தனையோ நட்சத்திரங்கள்
ஒளி வெள்ளம் பாய்ச்சுகையில்
'நீ' என்னும் நட்சத்திரத்திற்குள்
நானும் சிறு சுடராக
கண் சிமிட்டியதெப்படி?

பூமியில் எத்தனையோ
மனிதர்களைச் சந்திக்கையில்
'நீ' என்ற உனக்குள்
நானும் என் இருத்தலை
பறிகொடுத்ததெப்படி?

என்னைவிட மேலானோர்
உலகத்தில் வாழ்கையில்
இறைவா உன் இதயத்தை
என்னில் நீ இழந்ததெப்படி?

★ பெனி சே. ச.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

★ பே. கிறிஸ்ரீனா
குருக்கள்மடம்.

வாழ்க்கை என்பது விவாதத்திற்குரிய பொருளன்று. மாறாக சுவைத்துப்பார்க்க வேண்டியதொன்று. துன்பத்திலே வாழ்க்கை முடிந்துவிடலாம். துன்பத்திற்குப்பிறகு இன்பம்தான் வரவேண்டும் என்பது நியதியன்று. வாழ்க்கை என்பது ஓர் அனுபவம். இந்த வாழ்க்கை அனுபவத்தில்தான் நாம் புத்துணர்வும், சலிப்பும் அடைகிறோம். மாறாக வாழ்க்கை ஒவ்வொரு வினாடியும் புதிய மலராகப் பூக்கின்றது. வாழ்க்கை சலிப்படைவதில்லை. ஒரு தலைமுறையினரின் கண்ணோட்டத்தில் பழசாகிவிட்ட வாழ்க்கை அதே நேரத்தில் மற்றொரு தலைமுறையினரின் கரங்களில் புதுக்காவியமாக தவழ்கின்றது. மலர் உதிரும், உலரும். ஆனால் மலர்ச்சி எப்போதும் பழசாகாது. இவ்வாழ்க்கையில் எவருக்காக எவரும் வாழ்வதில்லை. ஆனாலும் எல்லோருக்காகவும் எல்லாரும் இருக்கிறோம். வாழ்க்கை நம்பிக்கையின்மேல் எழும்பி நிற்கும் கட்டிடம். நம்பிக்கை நலிந்துவிட்டால் வாழ்வே நலிந்துவிடும். வாழ்க்கையை நாம் ஒரு கலைக்கூடமாக்கி அங்கே அங்கே நாம் கல்வி பயிலவேண்டும்.

வாழ்க்கையில் ஒவ்வொன்றுக்கும் அளவு தேவை. ஆனால் ஒன்றித்து வாழ்ந்து பார்ப்பதற்கும், தனித்து நின்று சலிப்பதற்கும் அளவேயில்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் ஓர் ஒப்பற்ற பரிசு. மனிதன் உடலாலன்று உள்ளத்தால், இதயத்தால் வாழ்க்கை நடத்துபவன். பிறருக்காகத் துன்பம் அனுபவிப்பதில்தான் மனிதபிமானம் ஊற்றெடுக்கின்றது. இறுகிய பாதையிலும் இடையில் தண்ணீர் இருப்பதுபோல் உலகில் கொடியமனிதர்களாய்த் தோன்றும் மனிதர்களின் இதயத்திலும் ஏதாவது ஒரு மூலையில் அன்பு கசியத்தான் செய்கின்றது சிறந்த தனிமனிதன் உருவாக வாய்ப்பற்ற சமுதாயம் சிறந்த சமுதாயம் ஆகாது. ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கப் போராடுகிற தன்மையில்லாத தனி மனிதத்துவம் பொருளற்றது. சமுதாயம்தான் மனிதனுடைய எண்ணங்களுக்கும், பண்பாட்டிற்கும் உருவம் அளிக்கின்றது. தனிமனிதத் தத்துவங்கள் அவன் வாழும் சமுதாயத்தின் பிரதிபலிப்பே.

இறை நம்பிக்கை ஒரு மனிதனின் வாழ்வை அடியோடு மாற்றக்கூடிய திறன் படைத்தது. அவனது எண்ணங்களையும் வாழ்க்கை முறையையும் வழிப்படுத்தும் ஆற்றலுடையது. மனிதனின் அறிவு தன்னுடைய அறியாமையை உணரும்போது, அவனுடைய திறமை அவனுக்குப் பள்ளம் பறிக்கும்போது அவனுடைய உற்றார், உறவினர், நண்பர், பணம், பதவி, அதிகாரம் அனைத்தும் அருகில் இருந்தும் அவனுக்கு உதவாமல் புறக்கணிக்கும்போது, அவனுடைய நெஞ்சைக் கிழித்துப்பார்த்தால் அங்கே ஆண்டவன் தோன்றுவான். இறைவனே ஆரம்பமும் முடிவும். இயக்கம் அவனே. முடிவின்றி இயங்குவதும் அவனே. உலகில் நிகழும் ஒவ்வொரு செயலிலும் இறைவனது இயக்கம், ஆதிக்கம் இல்லாமலில்லை.

> தேனீக்கள், தங்கள் ஆட்சி முறையை கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே முடிவு செய்துகொண்டன. ஆனால் மனித இனமோ இன்னமும் தட்டுத்தடுமாறிக்கொண்டிருக்கிறது.
>
> —டொனால்ட் ராபர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் வாழ்க்கையில் எந்தச்சாலையில் போனாலும் எதிர்ப்படும் மகிழ்ச்சியிலோ, துன்பத்திலோ, இறைவனின் குரலொலியைக் கேட்கின்றான். வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் இறைவனைத்தவிர வேறு காரணங்கள் கூறுவது தவறு. அனைத்தும் இறைவனால்தான் நடக்கின்றன. நீ நினைப்பது எல்லாம் நடந்துவிட்டால் தெய்வத்தை நம்பவேண்டாம் எப்போது நீ போடும் திட்டம் தோல்வியடைகிறதோ அப்போது உனக்கு அனுமதியளித்துவிட்டான் என்று பொருள். இறைவன் மனிதனுக்கு நிர்ணயித்த வேகத்தில் ஏறுகின்ற வேகத்தைவிட இறங்குகின்ற வேகம்தான் அதிகம். இப்படியெல்லாம் நடக்காமல் இருந்திருந்தால் என்று எண்ணுவது எளிது. அப்படிச் சிந்திப்பதே மனிதனின் புத்திக்கும், சக்திக்கும் அப்பாற்பட்டது. ஏதோ ஒன்றிலிருந்து நடைபெறுகிறது என்பதை உறுதி செய்வதாகும்.

நம்பிக்கையே, வெற்றிக்கும், நிம்மதிக்கும் அடிப்படை. இன்பத்திற்கும் அதுவே மூலம். துன்பங்களைக் களைவதற்கும் அதுவே முக்கியம். வாழ்நாளில் ஒருவன் என்ன விலை நிர்ணயிக்கிறானோ, என்ன விலை கொடுக்கிறானோ, அதே விலையை மீண்டும் அவன் பெறுவான். இறைவனை ஆலயத்தில் மட்டும் தேடிப்பயனில்லை. ஆலயவாயில் நிற்பவரிடமும் காணவேண்டும். பூவிரிச் சோலையிலும் புன்னகை சிந்தும் குழந்தையிலும், தினம் வருந்திடும் வறியோர் கைகளிலும், நீதி கேட்போர் வாழ்விலும், கொடும் நோயால் துயருறுவோர் மத்தியிலும் இறைவனைக் காணவேண்டும்.

# சமாதானத் தீர்வுக்கு அமெரிக்க ஆயுதங்கள்!?

ஜனாதிபதியாகத் தெரிவானதும் மூன்று மாதங்களுக்குள் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தீர்வு ஒன்றைக் கொண்டுவருவதாக ஜனாதிபதியவர்கள் தேர்தல் பிரசாரத்தின் போது கூறி இருந்தார். இது தேர்தல் பேச்சு என்பது அப்போதே பலருக்கு தெரிந்ததுதான் தேர்தல் முடிந்து ஜனாதிபதியானபின்பு மறந்துபோன தீர்வுப் பொதியை மீண்டும் கையிலெடுத்துக்கொண்டு எதிர்க்கட்சியுடனும், ஏனைய கட்சிகளுடனும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தபின் புலிகளோடும் பேசப்போவதாகக் கூறப்பட்டது. ஏற்கனவே பேரினவாதிகளால் கடித்துக் குதறப்பட்ட தீர்வுப் பொதியை வைத்துக்கொண்டு என்னதான் பேசப்போகிறார்கள் என்று நாம் எண்ணிக் கொண்டிருந்த வேளையிலே நோர்வே நாட்டுப் பிரதிநிதி வேறு வந்து பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலைபற்றி உரையாடினார். தற்போது அமெரிக்காவிடமிருந்து ஏராளமான நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்ய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று செய்தி வந்துள்ளது. பேச்சுவார்த்தையைவிட, அரசியல் தீர்வைவிட சமாதானத்தைக்கான அரசாங்கம் அமெரிக்க ஆயுதங்களில்தான் நம்பிக்கை வைத்திருக்கிறது என அறிகின்றபோது நமக்கு ஆச்சரியம் வரவில்லை. 'சமாதானத்துக்கான யுத்தம்' என்று சொந்த மக்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்தும் இந்த அரசால் வேறு என்னதான் செய்ய முடியும். இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த நாட்டில் அப்பாவிகளின் மரண ஓலம் கேட்கப்போவது மட்டும் உறுதி.

-- மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியங்களின் நிலை என்ன?

## ஜுபிலி ஆண்டில் ஒரு கண்ணோட்டம்

★ மெற்றில்டா இராஜேந்திரம்

அன்பிய வாழ்வானது ஆதிக்கிறிஸ்தவ வாழ்வின் பாதையினை அடியொற்றி, மீளவும் உருவாக்கப்படும் வாழ்வாகும். நாம் வாழும் இவ்வுலகம் மூன்றாவது நல்லாயிரமாண்டின் தலைவாசலில் நிற்கும் இவ்வேளைதன்னில், இவ்வாழ்க்கை அமைப்பானது, மிகவும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதென்பதனை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

ஆனால், இன்றைய நிலையில் எம்மைச் சூழவுள்ள அன்பியங்கள் வளர்ந்து பெருகும் நிலையில் காணப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. பங்குத்தந்தையர் பலர் இதில் மிக்க ஈடுபாடு கொண்டிருப்பதையறியும்போது மகிழ்வடையும் அதே வேளையில், ஒருபக்கம் பொதுப்படையாக வளர்ச்சி கண்டுள்ளோமா என மனப்பூர்வமாகக் கூற ஒரு தயக்கம் ஏற்படுகிறது.

ஏன் இந்த நிலைமை? மறைக்கோட்ட ரீதியில் பார்த்தோமென்றால் கூட கடந்த சில வருடங்களாகவே, இதுசம்பந்தமான வெளியீடுகள், அன்பிய உருவாக்கங்களில் பலரும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதே வேளையில், இதன் வளர்ச்சி நிலைபற்றிச் சற்றுச் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஏனைய சில மறைமாவட்டங்களில் அன்பியங்களின் இயக்கம் பற்றியறிகையில், எமது மறைமாவட்டத்தில் அது இலைமறைகாயாக உள்ளது போன்றதோர் உணர்வு ஏற்படுகிறது.

ஏன் இறைமக்கள் இதனை விளங்கிக் கொள்ளவில்லையா? அல்லது தமது அனுபவப்பகிர்வை இறைவொளியில் வெளியிடுவதையும், அதன்பேறாக விசுவாசம் ஆழப்படுவதையும் விரும்பவில்லையா? அல்லது வேற்று மனிதராக நின்று, தம்மைத்தாமே ஏமாற்றிக்கொண்டு, வெட்டிப்பேச்சுப் பேசுவதே போதும் என்றிருக்கிறார்களா? திருவிவிலியத்தை மையமாக வைத்தே வாழ்வுபெற, இன்றைய எமது உலகவாழ்வு தடையாகிவிட்டதா? இக்காரணங்களில் எது எமது மந்தகதிக்குக் காரணமாக முடியும்? அல்லது இதைவிட வேறு காரணிகளுமுண்டா?

பாரத நாட்டில் காணும் நிலை வேண்டாம். ஆனால், திருப்தியுடன் இயங்கினால் போதாதா? செயற்படுவதனைத் தடுக்கும் காரணிகளைக் களையவேண்டாமா? எப்போது இவைகளையெல்லாம் தாண்டிக் கொண்டு அன்பியங்கள் எம்மத்தியில் பூரணப் பொலிவோடு மலரப்போகின்றன?

அனைவரும் சிந்திப்போம். அதைப்பற்றியறியும் ஆசையற்றோர், அவ்வாசையை ஏற்படுத்திக்கொள்வோம். ஏழுபடிமுறைகளில் ஈடுபடாதோர் அவற்றிலீடுபடுவதில் முனைவோம். இதில் நலமிக்க வாழ்வு பெறமுடியுமென்பதை அனுபவிப்போம். இதன் பயனாக செயற்பாடுகளில் ஈடுபடுவோம். குழுவாக இயங்கி அதன் நன்மைகளை நாடுவோம். யாம்பெறும் இன்பம் இவ்வையகம் பெறுக எனும் ரீதியில் செயற்படுவோம். பங்குத்தளத்தை மெருகேற்றுவோம் எனத் திடசங்கற்பம் செய்வோம்.

எனவே, இன்றே அறிவோம், அடைவோம், உயிர்பெறுவோம். அன்பியக் குழுக்களில் இணைந்து நன்மை பெறுவோம், ஜுபிலியாண்டில் எம் மனமாற்றத்திற்கு அன்பியங்கள் உதவ, நாம் எம்மை விட்டுக்கொடுக்க முன்வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுப்பதியில் மாசோகம்

## (மடுத்திருப்பதியில் எறிகணை வீச்சுக்குப் பலியாகி மரணமடைந்த அப்பாவி உயிர்களின் நினைவாக)

மக்களெல்லாம் அகதிகளாம்; மருதமடுத்திருப்பதியில்
மாதாவே! காக்கவென்று மனதுருகி வேண்டியபின்
அக்கணமே அவ்விரவில் ஆயாசம் மேலீட்டால்
ஆங்காங்கே தூங்கி ஆழ்ந்துறக்கங்கொண்டார்கள்

பிஞ்சுக் குழந்தைகளும் பெற்றெடுத்த அன்னையரும்
மிஞ்சும் நோயாளிகளும் முதியோர் மற்றிளையோரும்
அஞ்சாத நெஞ்சுடைய ஆடவரும் கன்னியரும்
தஞ்சமடைந்தார்கள் மரித்தாயாரின் சன்னிதியில்

இருதயத்துள் ஈட்டியினை ஏற்றியதும் இறைமகற்கு,
இரத்தமுடன் தண்ணீரும் இழிந்துயிரைப் போகியதால்
இருதயத்துள் ஈனரெமை ஏற்றணைக்குந் தேவமகன்
திருமுன்னே கொடுமையம்மா தீயவரின் சிறுமையம்மா!

வெடித்ததிர்ந்த எறிகணையால் வேட்டுகளால் வீழ்ந்தவர்கள்
துடித்தழிந்த செந்தமிழர் துயருழன்ற மதலையர்கள்
வடிந்தோடுங்குருதியினை வாதைகளைக் கண்டுமனம்
துடித்தழுந்தா நெஞ்சமுண்டோ துன்பமுறார் தானுமுண்டோ

அழித்தொழிக்கும் போர்முனையின் அவலங்கள் காண்பதற்கு
விழித்தெழுங்கள் வேத்தவையீர்! வேண்டாமே வீண்சமர்தான்
பழிக்கஞ்சிப் போர்நிறுத்தம் பார்முழுதும் சமாதானம்
செழிக்கவழி செய்திடுவீர் சிற்றிலங்கை நாட்டினிலே!

★ கே. ஜே. வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை-இலக்கிய மஞ்சரி



## 'ஒளியை நோக்கி'

### ஐப்பசி – மார்கழி 99

★ அ. ச. பாய்வா

நீர்கொழும்பு போன்ற இடத்திலிருந்து வித்தியாசமான மகுடத்தில், சுருக்கி நிறையச் சொல்லவேண்டுமென்ற ஆர்வத்தில் ஒரு சிறிய சஞ்சிகை வெளிவருவது பாராட்டத்தக்கது.

சமயநோக்கின் எல்லைக்குள் நின்று இலக்கியம் படைக்க முயல்வது மிகவும் சிரமமான காரியந்தான். இருந்தாலும் 'ஒளியை நோக்கி' கத்திமேல் நடந்திருக்கிறது.

2000த்தில் நாமெங்கே? உன்னுடன் விளையாடிய......, கட்சி & எதிர்க்கட்சி, மடு அன்னைக்கு, உரிமைகள் மறுக்கப்பட்டு ..... போன்ற குறிப்புகள் சிறிதாயிருந்தாலும் தெளிவும், துணிவும் செறிந்து கிடக்கிறது. அதிலும் 2000த்தைத் தலைக்குமேல் தூக்கி வைத்தாடாத ஒரே பத்திரிகை இதுவாகத் தானிருக்கவேண்டும். 'சனிவிலேச்' போன்று இன்னும் துணிகரத் தகவல்கள் தந்து பத்திரிகா தர்மத்தை உணர்த்தட்டும்.

நிறையக் கவிதைகள் இடம்பெற்றிருந்தாலும் செல்வி பிரிண்டா ஆசீர்வாதம் தேறக்கூடியவர்.

பொறுத்தபோதும் சமாதானமே
என்னைப் புதையலெடு-
நான்
புதைந்துபோகுமுன்-

ஏனைய கவிதைகள், நவீன கவிதைக்கு வேண்டிய புரட்சிகர உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தாலும், கலைவடிவமும், வசன ஊடகம்கொண்ட பொருளாளமும் வேண்டிக்கிடக்கின்றன.

சிறிய கதையொன்றையும் சேர்த்திருக்கலாம். விடயதானங்களின் தேர்வுக்கும், நேர்த்திக்கும் பாராட்டுக்கள்.

## உறவும் நட்பும் மலர

★ ஆறு முக்கியமான சொற்கள்: ஒப்புக்கொள்கிறேன், இது என்னுடைய தவறுதான் - நானே பொறுப்பு.

★ ஐந்து முக்கியமான சொற்கள்: தங்களுடைய பணி சிறப்பானது. மனமார்ந்த பாராட்டுக்கள்!

★ நான்கு முக்கியமான சொற்கள்: இதில் தங்களுடைய கருத்து என்ன?

★ இரண்டு முக்கியமான சொற்கள்: மிக்க நன்றி.

★ ஒரு முக்கியமான சொல்: நாம்.

★ தேவையில்லாத சொல்: நான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சமய உரையாடல்

## கிழக்குப் பல்கலைக்கழக சமயத்துறை விரிவுரையாளர் அருட்கலாநிதி டொமினிக் சாமிநாதன் அவர்களுடனான

## - நேர்முகம் -

- கடந்த இதழ் தொடர்ச்சி -



★ இந்து சமயம் பற்றியும் குறிப்பிட்டீர்கள் இந்து சமயத்திலே ஒரு பிரிவாக இருக்கின்ற வேதாந்திகள் அனைத்தையும்-அனைவரையும் இறை சொரூபமாக, பிரம்மமாகக் காண்பவர்கள். இராமகிருஷ்ண பரஹம்சர்கூட அனைத்து மதங்களும் ஒரே இறைவனை நோக்கியுள்ளன என்று கருதியதோடு, தமது வழிபாட்டு அறையிலேகூட இயேசு, மற்றும் வேறுமத அடையாளங்களையும் வைத்து வழிபட்டதாக நாங்கள் அறிகிறோம். அந்த வகையில் சமய இணக்கப்பாட்டின் முன்னோடிகளாக நாங்கள் வேதாந்திகளைக் கருதலாமா?

❋ இந்து சமயம் எல்லா மதங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தன்மையை தன்னகத்தே கொண்டிருப்பதை நாம் அறிவோம். அந்த முறையிலே பார்க்கும்பொழுது இந்து சமய மக்கள் பல்சமய நல்லுறவுக்கு ஒரு முன்னோடியாக இருந்திருக்கிறார்கள் என்று கூறலாம். ஆனால் அவர்கள் அதை ஒரு சமயத்தின் செயற்பாடாக முன்னெடுத்துச் சென்றதாக எந்தவிதமான ஆதாரங்களையும் காணமுடியவில்லை என்று நினைக்கிறேன்.

★ நல்லது தந்தையவர்களே! நமது நாட்டில் உலகின் நான்கு பெரிய மதங்களும் உள்ளன. இவைகளை எல்லாம் ஒரே கடவுள் கோட்பாட்டையே பெரும்பாலும் கொண்டுள்ளன. அப்படி இருந்தும் இந்நாட்டிலே காணப்படுகின்ற இன முரண்பாடுகளும் மதக் காழ்ப்புணர்வுகளும் ஒரே கடவுள், ஒரே கடவுளின் மக்கள் என்ற உண்மையை இந்த மதங்கள் ஆழமான முறையில் மக்களிடத்தே கொண்டு செல்லவில்லை என்பதைக் காட்டுவதாகக் கொள்ளலாமா? அதற்குக் காரணம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

❋ ஒரே கடவுள் கோட்பாட்டை கொண்டுள்ள மதங்கள் அந்த ஒரே கடவுள் கொள்கையை ஆழமாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவில்லை என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

சமயங்கள் மத்தியிலும் வரலாற்று ரீதியாகப் பார்க்கும்பொழுது சில வளர்ச்சியும் சில புரிந்துணர்வும், விழிப்பும் வளர்ந்து கொண்டு வருவதைக் காணலாம். இவ்வாறு தான் கத்தோலிக்க சமயத்திலும் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் 2ம் வத்திக்கான் சங்கத்துக்குப் பிறகு ஒரு புதுவகையான விழிப்புணர்வும் சமயத்தில் ஆழ்ந்த அறிவும் ஏற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அதனடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படையில் இன்று நாங்கள் எங்களுக்குக் கிடைத்த அந்த ஒரே கடவுள் எல்லா மக்களுக்கும் தந்தையாக இருக்கின்றார் என்பதை 2000ம் ஆண்டுகளாக உணர்ந்திருந்தாலும் அதை முன்னெடுத்துச் சென்ற வழிமுறைகளில் சில தவறுகளும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம்; ஏற்றுக்கொள்கிறோம்.

மக்களை மனம் மாறச் செய்யவேண்டும் என்கின்ற ஒரு கணிப்பு இருந்திருந்தாலும் நாடுகளைப் பிடிக்கும் முயற்சி மத்திய நூற்றாண்டில் உருவாகியபொழுது நாடுகளைப் பிடித்த இடங்களில் தங்களுடைய மதத்தையும் பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் மிக்கவர்களாய் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள்.

**ஒரே கடவுள் எல்லா மக்களுக்கும் தந்தையாக இருக்கிறார் என்பதை 2000ம் ஆண்டுகளாக உணர்ந்திருந்தாலும் அதை முன்னெடுத்துச் சென்ற வழிமுறைகளில் சில தவறுகளும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம்; ஏற்றுக்கொள்கிறோம்.**

ஆனால் அதை அன்று அவர்கள் பரப்பிய முறையிலே கடைப்பிடித்த முறைகளை இன்று நாங்கள் பார்க்கின்ற பொழுது அவைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தென்படவில்லை. அதனாலே அந்த மறைகளைப் பரப்பிய பொழுதும் அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய பண்பு மற்ற மக்களுடைய உள்ளத்தில் வளரமுடியாமல் போய்விட்டது. மாறாக எதிர்ப்புச் சக்தியே அவர்களிடத்தில் மேலும் மேலும் வளர்ந்தது.

★ இது மிகச் சரியான கருத்து என்று நான் நம்புகிறேன். இறுதியாக பல்சமய மக்களும் பரந்து வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் பல்சமய உரையாடலுக்கான ஒரு களம் இருப்பதுபோல் தெரிகிறது. ஆகவே இங்கே எந்தளவுக்கு இத்துறையிலே முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன? சிறப்பாக வருகின்ற ஜூபிலி ஆண்டை ஒட்டிய செயற்பாடுகளிலே இதற்கான எத்தகைய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட இருக்கின்றன என்று நீங்கள் சொல்வீர்களா?

※ பல்சமய உரையாடலிலே இரு அம்சங்கள் உண்டு. ஒன்று கிறிஸ்தவர்கள் மத்தியிலே ஓர் உரையாடல். அதை நாங்கள் கிறிஸ்தவ ஒன்றிப்பு என்று கூறுவோம். ஏனென்றால் இன்று கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் பிரிந்து வாழுகின்ற தன்மை. உதாரணமாகக் கத்தோலிக்கர்கள் மற்றக் கிறிஸ்தவ சபைகளோடு விசேடமாக அங்கிலிக்கன், மெதடிஸ்ற், தென்னிந்தியத்திருச்சபை ஆகியவர்களோடு இணைந்தில்லாது பிரிந்திருப்பது கிறிஸ்தவ சாட்சியத்துக்கு மிகவும் முரணான செயற்பாடாகும். ஆகவே கிறிஸ்தவர்கள் தங்கள் மத்தியிலே ஒன்றுசேர முயற்சி எடுப்பது ஓர் அம்சமாகும். அடுத்தது கிறிஸ்தவர்கள் இந்துக்களோடும், முஸ்லிம்களோடும், பௌத்தர்களோடும் உரையாடல் நடாத்துவது பல்சமய உரையாடலில் மற்ற அம்சமாகும். இவை இரண்டையும் நாங்கள் அடுத்த நூற்றாண்டிலிருந்து மிகவும் முக்கியமாக முன்னெடுத்துச் செல்ல முனைகிறோம். இதில் ஒரு பகுதி கிறிஸ்தவர்களை ஆயத்தம் செய்தல். ஏனென்றால் நாங்கள் பரம்பரையாக மற்ற மத மக்களைப்பற்றி தவறான மதிப்பீடுகளையும் கணிப்புகளையும் கொண்டிருக்கின்றோம். ஆகவே பிற மறைமட்டில் நாம் கொண்டுள்ள தப்பெண்ணங்களையும் தவறான அபிப்பிராயங்களையும் களைதல் முக்கியமான ஓர் அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது பிற மறையினர் மட்டில் புரிந்துணர்வை வளர்த்தல் முக்கியமான ஒரு அம்சமாகும். மூன்றாவது பிற மறை மக்களோடு சகிப்புத் தன்மையைக் கொண்டவர்களாக நாங்கள் வாழ முயலுதல். இவைகளைக் கத்தோலிக்கர்கள் தங்களிடத்தில் உருவாக்குதல் ஒருபடி. அடுத்தது உண்மையான கிறிஸ்தவ அன்புக்கு சாட்சி பகருகின்ற வாழ்க்கை நடாத்துதல் இரண்டாவது பகுதியின் ஓர் அம்சமாகும். அடுத்து பிற மறையினரோடு பேசும்பொழுது அவர்களுடைய பக்தர்கள், நண்பர்கள் என்னும் ஒரு நட்புச் சூழ்நிலையை உருவாக்குவது எங்களுடைய அடுத்த முயற்சியாக இவ்வாண்டிலே அமையும்.

★ தந்தையவர்களே! இந்த முயற்சிகளெல்லாம் வெற்றிபெறவேண்டும். இதனூடாக மதங்களைக் கடந்து மனித நேசிப்பும் உறவும் மகிழ்ச்சியும் சமாதானமும் இந்த நாட்டில் நிலவும் நாள் வரவேண்டும் என்று வாழ்த்தி தங்களுடை அதிகரித்த பணிகளுக்கு மத்தியிலும் எமது அழைப்பை ஏற்று இங்கு

**கத்தோலிக்கர்கள் மற்றக் கிறிஸ்தவ சபைகளோடு விசேடமாக அங்கிலிக்கன், மெதடிஸ்ற், தென்னிந்தியத் திருச்சபை ஆகியவர்களோடு இணைந்தில்லாது பிரிந்திருப்பது கிறிஸ்தவ சாட்சியத்துக்கு மிகவும் முரணான செயற்பாடாகும்.**

மனதைப் புண்படுத்தாத வார்த்தைகளைப் பாவித்து எங்களுடைய இறை அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்து கொள்வதும் அவர்களுடைய இறை அனுபவங்களை செவிமடுத்துக் கேட்டலும் இந்தக் கலந்துரையாடலில் முக்கியமான ஒரு பகுதியாகும். இதற்கு நாங்கள் மக்களை இந்துக்களை மற்றக் கிறிஸ்தவர்களை, இஸ்லாமியர்களை வரவழைத்து அவர்களோடு நட்புறவு கொண்டாடுவதுதான் முதலாவது படி. இந்தப் படியைத்தான் நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். அண்மைக் காலங்களில் கிறிஸ்தவர்களோடு ஆரம்பித்திருக்கிறோம். கடைசியாக நடந்த கிறிஸ்தவ ஒன்றிப்புக் கூட்டத்திலே வேதாகமத்தைப்பற்றி ஓர் ஆய்வு நடந்தது. அந்த ஆய்வுக்கு எண்பத்திரண்டுபேர் கிறிஸ்தவ மறைப் போதகர்களும், குருமாரும் அவர்களுடைய பணியாளர்களும் வந்திருந்தார்கள். அடுத்த ஆண்டு நாங்கள் முஸ்லிம் மக்களோடு நட்புறவு ஏற்படுத்த முனைகின்றோம். ஏற்கனவே இது தொடர்பாக காத்தான்குடியிலுள்ள முஸ்லிம் நண்பர்களோடு தொடர்பு கொண்டுள்ளோம். அவர்களும் வருவோம், பேசுவோம் என்று கூறியுள்ளனர். பின்பு இந்துப் பெரியார்களுடனும் நாம் இத்தகைய உறவை ஏற்படுத்தி நாம் அனைவரும் இறை வந்து பல்சமய உரையாடல் தொடர்பாக பல பயனுள்ள கருத்துக்களை எம்மோடு பகிர்ந்து கொண்டமைக்காக தொண்டன் வாசகர் சார்பில் எமது நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்ளுகிறோம்.

சந்தித்தவர்:

**மலர்வேந்தன்**

## அறியவில்லை!

கிறிஸ்தவ மதப் போதனையின் பாதியை கிறிஸ்தவர்களே இன்னும் புரிந்துகொள்ளவில்லை. இயேசுவும் கடவுளும் ஒன்றே என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் இயேசுவும் மனிதனும் ஒன்றே என்பதை இன்னும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

ஓர் இந்துமதத் துறவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலரா ஆண்டு

## சிறுகதை

★ அ. ச. பாய்வா

ஆறு அழகாய்த்தான் ஓடிக்கொண்டிருந்தது செம்புலத்துப் பெயர் நீரால் வனப்பும் வளமும் பெற்றுச் சளசளத்துக் கொண்டிருந்தாலும், ஆற்றையே நோஞ்சானாக்குமளவிற்கு 'சல்வீனியா' அதில் ஆக்கிரமித்திருந்தது அவனுக்கு வேதனையாயிருந்தது. ஆக்கிரமிப்பு எதில்தானில்லை! அதுவே பலாத்காரமாகி, ஒன்றையொன்று வீழ்த்தி... அழித்து..

நீருக்கணித்தாய்ப்படர்ந்திருந்த கிளையிலிருந்து மீன்கொத்தியொன்று செங்குத்தாய் நீருக்குள் அமிழ்ந்து, இரைதேடிக் கொண்டிருந்த மீனொன்றைக் கவ்விக் கொண்டு ஆனந்தமாய் வெளியேற.. ஒன்றின் அழிவில் இன்னொன்றின் வாழ்வு. இது இயற்கைக்குப் பொருந்தலாம். மனிதருக்குமா..?

மனிதருக்கும் பொருந்துமென்று உணர்த்தப்படுவதால்தான், கிராமமென்றும் சொல்லமுடியாத, காடென்றும் ஏற்கமுடியாத, இரண்டுங்கெட்டான்தனமான அந்த இடத்தில், அடுக்கிவைக்கப்பட்ட வெற்றுச் சோடாப் போத்தல்களையும், மண்ணால் நிரப்பப்பட்ட வெற்றுத் தகரத்தாலியற்றப்பட்டுச் சாம்பர் படிந்த அடுப்பையும் வைத்துக்கொண்டு கடையென்றும் வீடென்றும் இன்னும் எத்தனையோ பெயர்களால் அழைக்கக்கூடிய குடிசைபோன்ற ஒன்றின் முன்னால், இருக்கை, படுக்கையென்று சந்தர்ப்பத்துக்குப் பாவிக்கக்கூடிய பெரிய காட்டுமர அடிக்குற்றியொன்றில் ஏகாந்தத்தின் பிடியில் தன்னைத் தொலைத்துவிட்டு அந்த அன்னியன் உட்கார்ந்திருந்தான்.

நீண்ட இடைவெளிக்குப் பின் ஒவ்வொன்றாய்க் கடந்து செல்லும் எந்த வாகனமும் அவனை ஏற்றிச் செல்லக்கூடியதாக இருக்கவில்லை. நேரமும் அங்கு கடந்துகொண்டிருந்தது.

இன்னும் முப்பது கிலோமீற்றர் அவன் பயணிக்க வேண்டும். ஐந்து சென்றிகளில் இறங்கி ஏறி, அவர்கள் சந்தேகப்படக்கூடிய அத்தனை அங்கங்களையும் தடவக்கொடுத்து, ஐ. டி. காட்டி, ஒரு மனிதனுக்கு இருக்கக்கூடிய அத்தனை சுயங்களையுமிழந்து, துன்பங்களோடு செய்யவேண்டிய பிரயாணம் அவன் கையைவிட்டு நழுவிக் கொண்டிருந்தது.

''டேய்..... நடேசி..... தொலஞ்சிபோவானே... ...'' நீண்டநேரத்தின்பின்குடிசைக்குள்ளிருந்து யாரையோ வைதபடி வெளியே வந்தவளுக்கு முப்பது வயதிருக்கும் எந்த மகனைத் திட்டுகிறாள்? மூத்தவனையா... நடுவனையா... இளையவனையா...?

குடிசையை அண்டி, ஒரு மனித உயரத்துக்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் தறித்த காட்டு விறகுக்கட்டுகளின் உழைப்புக்குப் பின்னே நிற்கும் யாரையுமவள் திட்டித் தீர்க்க நியாயமில்லை. பின்னே .. யாரைத் திட்டுகிறாள்.

இடுப்பில் கையூன்றி இளைத்துக்கொண்டு நின்ற விதம், அவள் கர்ப்பமாயிருக்கிறாளென்று உணர்த்திற்று.

என்னதானிருந்தாலும் இனசனமென்று அட்டமயலில் யாருமின்றி, பகல் வேளைகளில் அவ்விடத்தில் தரித்துச்செல்லும் ஓரிரு வாகனங்களையும், அதற்குமேலாகக் கன்னிகழியாத அந்தக் காட்டையும் நம்பி வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்மம் அவனுக்குள் வியப்பை ஏற்படுத்தியது. எவ்வளவு விரைவாக இந்த இடத்தை விட்டகல வேண்டுமென்று நினைக்குமவனுக்கு, வாழ்வின் பரிபாஷையை அவனமர்ந்திருந்த மரக்குற்றி கற்பித்துக்கொண்டிருந்தது.

இருள் யாவையும் மூடத்தொடங்கிற்று. சில்வண்டுகளின் இரைச்சல்களின் நடுவில் குப்பி விளக்கினொளியில் ஒற்றைப்பாயில் படுத்து, தாங்களிந்த நவீன உலகின் பின் தங்கிப்போன பிரஜைகளென்ற பிரக்ஞையின்றித் தம்மை, வாழுமிந்த உலகத்தின் சொந்தக்காரர்களாய் சுவீகரித்துக்கொண்டு வாழுமிந்த வாழ்க்கைகூட ஏதோ ஒரு விதத்தில் சரியானதென்றும், விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதென்றும் அவனுக்குப்பட்டது.

எந்த எண்சாத்திரக் கணிப்புகளுக்குள்ளும் தங்களைத் தொலைத்துவிடக்கூடியளவுக்குக் குழப்பமற்ற, தங்கள் பிறந்த திகதியே தெரியாத, தாங்கள் வாழும் நாள் தேதிகூட அறியாதவர்களாய் தான் அவர்கள் இருக்கவேண்டும்.

வாழ்வின் கற்பிதங்களின் கொச்சநிலை கடந்த, தெட்டத்தெளிந்த அந்த ஜீவராசிகளின் உழைப்பும் ஆன்ம இருப்பும், இன்னுமிந்த உலகம் செத்து விடவில்லையென்பதை நிரூபித்துக்கொண்டிருந்தன.

மரக்குற்றிக்கு ஓய்வுகொடுத்து ஜீவனற்றுப்போன அந்த வீதியின் நடுவில் கைப்பையைத் தலைக்குவைத்து அண்ணாந்து சாய்கிறான். நிலவின் குளிரும், பாதையின் இதமான சூடும், அலுத்துப்போன நகர வாழ்விற்கு ஒத்தடம் கொடுப்பது போலிருந்தது.

'நில்ரா கறுப்பா.....' பாய்ந்தோடும் எருமையின் வாலில் தொங்கிக்கொண்டு வந்தவாறே 'தொப்' பென்று விழுந்த அந்தச் சிறுவனுக்கு கையில் சிராய்ப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். இடுப்பிலிருந்து நழுவிப்போன காற்சட்டையைக்கூட கவனியாது விழுந்தவாக்கிலேயே முழங்கையை வாயால் ஊதியவாறே எழுந்தான். பிடிப்பேதுமற்றிருந்த காற்சட்டை இடுப்பைவிட்டு முற்றாகவிலகி காலடியைச் சரணடைந்தது.

அந்நியனைக்கண்ட வெட்கத்தில் வயிற்றை எக்கி, அவிழ்ந்துகிடந்த காற்சட்டையின் மேலந்தங்களை முறுக்கி உட்பக்கமாய்ச் சொருகிக்கொண்டான். ஆனாலும் ஓ.. வென்று திறந்திருந்த காற்சட்டையின் முன்பக்கத்தினூடாக தெரியுமந்த அம்மணத்தைக்கூட மறைக்க அவன் முயற்சிக்கவில்லை. அவனது சிறியவயது, அல்லது அந்நியனும் ஆண்மகன்தானே என்று எண்ணியுமிருந்திருக்கலாம்.

இவையெல்லாவற்றையும் விட, தன்னைவிட்டு நழுவிப்போன ஏதோவொரு பொருளுக்காய் அவன் கண்கள் பரபரத்தன. தான் விழுந்த இடத்துக்குச் சற்றுத்தள்ளி விழுந்துகிடந்த அந்த பச்சைச் சோளன்குலையை ஆசையோடுவரடி, காற்சட்டையில் மேலும் கீழுமாகத் தேய்த்துத் துடைத்து, காக்காய்க் கடியொன்றைக் கடித்து மீண்டும் காற்சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டான்.

'நாசமறுவானே... மால படுறதெரியாம என்னடா செய்யிறா...... இண்டைக் கொன்ன பாடயில போட்டுத்தான் மறுவேலபாக்கிற...'

கையில் மிலாறுடன் அந்தத்தாய் குடிசையிலிருந்தவாறே கறுவிக்கொள்ள அந்த அதே நாசமறுவான் இங்கிருந்தவாறே தலையை ஒருவாறு ஆட்டி அவளுக்கு மேலும் ஆத்திரத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தான்.

### ஐ. நா. வின் எச்சரிக்கை

உலகம் அடுத்த நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்கும் போது 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் அடிப்படை வசதிகூட இல்லாத நிலையில் இருப்பார்களென்று ஐ. நா. வின் அறிக்கை எச்சரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அன்னியனுக்கு மிக அண்மையில் அந்தச் சிறுவன் நின்றிருந்ததால், பச்சைச் சோளங்குலையைக் காரும் போது கடவாயில் படியும் வெண்மை, கலைந்த தலை, வறுமையிலும் உரமேறியிருந்த உடல்வாகு என அவனுக்கு விசித்திரமாய் அந்தச் சிறுவனும், வெள்ளையும் சொள்ளையுமாய், நேர்த்தியாய் உடுத்திருந்த அன்னியனான இவனந்தச் சிறுவனுக்கு விசித்திரமாயும் தோன்ற. முப்பது கிலோ மீற்றர் இடைவெளிக்குள் ஆளுக்காள் ஓரினத்துக்குள்ளேயே விசித்திரமாய்ப்போன இந்த மாபெரிய விந்தையைச் சுமந்துகொண்டு வருகின்றபுத்தாயிரமாண்டை வரவேற்க ஆயத்தம்செய்யும் மனித விசித்திரத்தை யெண்ணியவன் வெட்கித்திருக்கவேண்டும்.

இந்த இடைவெளியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட அந்தப் பெண் சந்தடி செய்யாமல் வந்து சிறுவனைப் பிடித்துக் கொண்டாள். போவியா... மதவுப் பக்கம் போவியா இனி. இல்லம்மா போகமாட்டம்மா.

தாய்க்கும் மகனுக்குமிடையில் நடக்குமந்த துவந்த யுத்தம், அந்த இடத்தில் நீண்ட நேரம் நிலவிய மௌனத்தை உடைத்துவிட்டதில் அவனுக்குச் சந்தோஷமே. இந்தத் தாய்பிள்ளை சண்டை தொடர்ந்து நடக்காதோவென்று ஏங்கினான். தனிமையும் மௌனமும்தான் எவ்வளவு கொடியது! தாய் இன்னுமொரு மிலாறை முறிக்கும் தருணம் பார்த்து சிறுவன் காணமற்போனான்.

இவனுக்கு எழுந்து ஏதேனும் செய்யவேண்டும் போலிருந்தது. காலாற ஆற்றங்கரையோரம் நடந்தான். சலனமற்ற அலைகள் அவன்காலை முத்தமிட்டோடின.

சிறுவனை முத்தமிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அடிவிழும்போது காலை மாறி மாறியவன் துடித்தவிதம், அடிதாங்கமுடியாமல் ஒருநாள் அவன் ஓடியே போகக் கூடுமென்ற பயத்தை உண்டாக்கியது. அவனால் ஆற்றில் ஜொலிக்கும் தண்நிலவைக்கூட ரசிக்கமுடியாதிருந்தது.

எத்தனையோ வருடங்களுக்குப்பிறகு வருகின்றதொரு அபூர்வ பௌர்ணமி இதுவென்பதுகூட மறந்து, அழுதுகொண்டோடிய அந்தப் பிள்ளையின் முகந்தான் நெற்றியில் அறைந்தாற்போலிருந்தது.

இரண்டாயிரமாண்டு நாளை பிறக்கப்போகிறது, புத்தாண்டு பிறக்கும்போது கோவிலில் இருக்க வேண்டுமென்கின்ற, இதுவரை அவனுக்குள் இருந்த அந்த ஊட்டப்பட்ட உணர்வுகள் அந்த ஒரு பவுர்ணமியில் பரிநிர்வாணம் அடைந்ததுபோலுணர்வு . அவனுக்குண்டானது.

மீண்டுமவன் தன் அரியாசனமான மரக்குற்றிக்கு வந்தபோது, இதற்கப்பாலும் ஓடமுடியாது. ஓடினாலும் எங்கு செல்வதென்ற தீர்மானம் எடுக்க முடியாதொரு இயலாமை நிலையில், அந்த மரக்குற்றியில் இருந்து கொண்டு சோளன் பொத்திக்கு இறுதிக்கிரியைகள் நடாத்திக்கொண்டிருந்தான்.

தம்பி உன்ரபேர் நடேசா
ஓம்... தலையாட்டினான்
இன்டைக்கென்ன சாப்பிட்டநீ
இல்லெ
நேத்து
இல்லெ
முந்தநாள்
இல்ல
ஏன்?
அப்பா செத்துப்போய்த்தார்
எப்ப
மளவெஞ்சிதே அண்டைக்கு
ஐந்து நாட்கள். தனக்குள் சொல்லிக்கொண்டான்.

என்னெண்டு
ஆமிக்காரன் ஆமி... மதவடிலவச்சிச் சுட்டவன்.


அன்னியனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. மரணத்தை மிகச் சாதாரண வார்த்தைகளால் உச்சரிக்கக் கற்றுக் கொண்டவோர். இனத்தின் வாரிசுகள் இந்த உலகத்துக்குக் கொண்டுவரப்போவது என்னவாக இருக்கும். நினைக்கவே பயங்கரமாய்த் தெரிந்தது எதிர்காலம்.

24ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கலைஞர்கள் எழுத்தாளர்கள்



## செல்லத்துரை செல்வராஜா

புதிய உலகம் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகளில் அடிக்கடி ஒலிக்கின்ற ஒரு பெயர் செல்லத்துரை ஜெயராஜா. 1997ம் ஆண்டு முதல் இன்றுவரை நூற்றுக்கணக்கான வானொலி நிகழ்ச்சிகளை - நாடகங்கள் உரைச்சித்திரங்கள், சிறுவர் கதைகள் - தயாரித்து வழங்கியுள்ள - வழங்கிவருகின்ற இவர் மட்டக்களப்பு தாண்டவன்வெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாடசாலைப் பருவத்திலேயே மேடை நாடகங்களில் நடித்துப் பரிசுபெற்றவர்.

1960ம் ஆண்டுகளில் மட்டக்களப்பில் பிரபலமாக விளங்கிய தேனமுத இலக்கிய மன்றத்தில் இணைந்து அதன் தலைவர் திமிலை மகாலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பல நாடகங்களில் நடித்ததன் மூலம் தாம் நாடக அனுபவங்களைப் பெற்றதாகக் கூறுமிவர் 1965ம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மட்டக்களப்பில் நடாத்திய விழாவில் தேனமுத இலக்கிய மன்றத்தின் சார்பில் மேடை ஏற்றப்பட்ட நாடகத்தில் நடித்து அன்றைய வானொலி நாடகத்தயாரிப்பாளர் திரு. சண்முகநாதனின் (சானா) பாராட்டையும் பெற்றவராம். அதன் மூலம் வானொலித் துறையில் கால்பதித்ததோடு தொடர்ந்து சானாவின் நாடகங்களிலும் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

தமது வானொலி நாடகத்துறை வளர்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்தது 'புதிய உலகம்' கத்தோலிக்க நிகழ்ச்சியே என்று கூறும் இவரது வானொலி நாடகத் தொகுப்பு நூல் ஒன்று வெளிவந்துள்ளது. திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'மீண்டும் பிறந்தால் மலரும் வாழ்வு' என்னும் அந்த நூலை வெளியிட்டுவைத்து பெருமைப்படுத்திய ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களையும், அருட்சகோதரர் மத்தியு அவர்களையும் இன்றும் நன்றியுடன் நினைக்கின்றார்.

பத்திரிகைத் துறையிலும் ஆர்வமுள்ள இவர் 'தொண்டன்' பத்திரிகை ஆரம்பித்த காலத்திலிருந்தே பல ஆக்கங்களை அளித்து வந்தவர். கடந்த ஓராண்டாக 'கதைசொல்லும் விவிலியம்' தொடரை சிறுவர்களுக்காக எழுதியவர். 1975ம் ஆண்டு தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். திருச்சபையின்பணிகளில்ஆர்வமுடன்ஈடுபட்டு உழைக்கும் இவர் தாண்டவன்வெளி, கல்லாறு, கல்முனை போன்ற பல பங்குகளில் நாடகங்களை எழுதியும், நடித்தும், நெறிப்படுத்தியும் உள்ளார். ஒரு காலத்தில் தாண்டவன்வெளி கத்தோலிக்க வாலிபர் சங்கத்தில் இணைந்து பணிபுரிந்த இவர் தற்போது திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவிலும் அங்கம் வகிக்கிறார். 1982ல் இவரது நாடகமொன்று அருள்தந்தை நாகல் அவர்களினால் வீடியோ படமாக்கப்பட்டது.

22ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணமும் குடும்ப வாழ்வும்

★ அருட் சகோ. தோமஸ் ஜோசப் ஜஸ்டஸ்

இறைவன் மனிதனைத் தம் சாயலாகவும், பாவனையாகவும் படைத்தார். அன்பால் தூண்டப்பட்டு அவனை ஆக்கினார். அதேசமயத்தில் அன்பு செய்வதற்காகவே அவனை அழைத்துள்ளார் என்று விவிலியம் கூறுகின்றது. கடவுள் அன்பாயிருக்கிறார். அவரது உள்ளார்ந்த வாழ்வும், ஆளுறவு சார்ந்த அன்பின் ஒன்றிப்பை உள்ளடக்கிய மறைபொருளே. ஆண், பெண் மனித இயல்பை தம் சொந்த சாயலில் உருவாக்கி இடையறாது பாதுகாத்துவரும் இறைவன் அம்மனித இயல்பின் அன்பு, உறவு ஒன்றிப்பு ஆகியவற்றை வாழ்வதற்கான அழைப்பையும் அவ்வழைப்பைச் செயல்படுத்துவதற்கான சக்தியையும், பொறுப்பையும் கொடுத்துள்ளார். இதிலிருந்து அன்புதான் ஒவ்வொரு மனிதனுடையவும் அடிப்படையான, இயல்பான அழைத்தல் என நாம் அறிகிறோம்.

இறைமகன் இயேசுவின் மீட்புச் செயலால் மீட்படைந்தது மனிதகுலம். அதே அன்பு இன்றும் மீட்புப்பணியைத் தொடர்ந்து நிகழ்த்தும் கருவியாக உள்ளது. இந்த மனித அன்பின் தனிப்பட்டதொரு வெளிப்பாடு திருமணமும் குடும்பவாழ்வுமாகும். திருமண அன்பு குடும்ப வாழ்வின் மையமாகத் திகழ்கின்றது. இறைவன் அன்பால் தூண்டப்பட்டு மனிதனை ஆக்கினார். அதேவேளையில் அன்பு செய்வதற்காகவே அவனை அழைத்துள்ளார்.

எனவேதான் திருமணம் என்பது ஒரு அன்புப் பிணைப்பு எனவும், இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே உள்ள அன்பு உறவின் வெளியடையாளம் எனக் கூறலாம் திருமணம், இறைவனையும், மனிதனையும் இணைக்கின்ற உடன்படிக்கையின் சாயலும், வெளியடையாளமுமாகும்.

திருமணத்தால் புனிதமடைகின்ற மனித அன்பு, சிலுவையில் இயேசு எண்பித்த தியாக அன்பை நமக்கு நினைவூட்டுகிறது. இயேசுவின் தியாக அன்பு வெளியிலிருந்து வருகின்ற ஒரு சட்டமன்று. மாறாக, ஆண்டவர் பொழிகின்ற ஆவி புதிய இதயத்தை அளிக்கிறார். இவ்வாறு, நம்மைக் கிறிஸ்து அன்பு செய்துள்ளது போலவே ஆணும் பெண்ணும் தமக்குள் ஒருவர் ஒருவரை அன்பு செய்யும் திறனையும் ஆவியானவர் அவர்களுக்கு வழங்குகிறார்.

அன்பு பிரமாணிக்கப் பண்புகொண்டது. எனவே ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே எழுகின்ற அன்பும் பிரமாணிக்கமானதாக இருத்தல் வேண்டும். இத்தகைய அன்பிலிருந்து உருவாகின்ற குடும்பம் வாழ்வினுடையவும், அன்பினுடையவும் நெருங்கிய உறவுச் சமூகமாக உள்ளதால் அது அன்பைப் பாதுகாக்கின்ற, அன்பை அறிக்கையிடுகின்ற, அன்பைப் பகிர்ந்து கொள்ளுகின்ற பணிப் பொறுப்பைப் பெற்றுள்ளது. அன்பில்லாக் குடும்பம் உறவுகளால் அமைந்ததொரு சமூகம் ஆகாது. அதுபோலவே அன்பு இல்லாவிட்டால் குடும்பம் உயிர்வாழ இயலாது. மேலும் உறவுச் சமூகமாக வளர்ச்சியடையவும், நிறைவு பெறவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்வு, திருமணத்தின் பண்புகளை வளர்க்கக்கூடிய நிறுவனமாகவும், அருளடையாளமாகவும் உள்ளது. குடும்ப வாழ்வு அன்பின் உடன்படிக்கையில் இருந்து பிறப்பது என்றும், இந்த அன்பு உடன்படிக்கை அருளடையாளத் தன்மை கொண்டதாகவும் விளங்குகின்றது.

குடும்ப வாழ்வுபற்றிய அறிவுரையை ஆழமாகப் புரிந்துகொண்டு அதை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டுமென்றால், இறைவனின் எல்லையற்ற அன்புதான் அனைத்திற்கும் தொடக்கமாக உள்ளது. திருமணமும், குடும்பமும் இறைவனால் அளிக்கப்படுகின்ற அன்புக் கொடைகள், அன்பு அழைப்புக்கள். திருமணமும், குடும்ப வாழ்வும் மீட்பின் வழியாகவும், புனிதத்தின் பாதையாகவும் இறைவன் அமைத்துள்ளார்.

கிறிஸ்துவில் நிகழும் திருமண வாழ்க்கையின் பெருமையையும் அழகையும் தெர்த்துல்லியன் என்பவர் புகழ்பெறத் தகுதிவாய்ந்த தொரு பகுதியில் பின்வருமாறு எடுத்தியம்புகிறார். திருச்சபையால் இணைக்கப்பெற்று, காணிக்கைப் பலியால் உறுதியடைந்து, ஆசியால் முத்திரைபெற்று, வானதூதரால் புகழப்பெற்று, தந்தையால் ஒப்புதலளிக்கப் பெற்ற திருமணத்தின் நற்பேற்றினை எடுத்துக்கூறவும், இயலுமோ? இரு விசுவாசிகளை ஒரே நம்பிக்கையில், ஒரே பணியில் இணைக்கின்ற இத்தகைய இணைப்பு வியப்புக்குரியது. அவர்கள் இருவரும் உடன்பிறப்புக்கள், உடனூழியர்கள், ஊனுடலிலோ ஆவியிலோ அவர்களிடையே எவ்வித வேறுபாடும் இல்லை. நேர்மாறாக உண்மையிலேயே அவர்கள் ஒருடலில் இருவர். எங்கு உடல் ஒன்றாகிறதோ அங்கு ஆவியும் ஒன்றே.

திருமணத்திலும், குடும்பத்திலும் மண வாழ்வு, தந்தை, தாய், மக்கள், உடன்பிறப்பு ஆகிய பல்வேறு உறவுகள் ஒருங்கிணைந்து காணக்கிடக்கின்றன. இவ்வுறவுகளின் வழியாக ஒவ்வொரு மனிதனும் மனிதக்குடும்பத்திலும், இறை குடும்பத்திலும் இணைக்கப்படுகின்றான்.

> நல்லவர்கள் என்று உலகத்தால் பாராட்டப்பட்டவர்கள் பலர். ஆயினும், நல்லவர்களாக உலகத்தில் வாழ்பவர்கள் வெகுசிலரே.

குடும்பம் வாழ்வினுடையவும், அன்பினுடையவும் உறவுச் சமூகமாக அமைந்துள்ளதால், அது தன் உண்மை நிலையை அதாவது, தான் வாழ்வினுடையவும், அன்பினுடையவும் உறவுச் சமூகமாக இருப்பதை மேன்மேலும் அதிகமாக அடைந்திடும் பொறுப்புடையது. இக்காரணத்தை முன்னிட்டு குடும்பம் அன்பைப் பாதுகாக்கின்ற, அன்பை அறிக்கையிடுகின்ற, அன்பைப் பகிர்ந்துகொள்ளுகின்ற பணிப் பொறுப்பைப் பெற்றுள்ளது.

குடும்பம் ஆற்றவேண்டிய தனித்தனி பணிகளெல்லாம் மேற்கூறிய அடிப்படையான அன்புப்பணியின் உறுதியான வெளிப்பாடுகள் அதன் நடைமுறையிலான செயல்பாடுகள். எனவே குடும்பத்தின் பணிப் பொறுப்பைச் சார்ந்த சீரிய செல்வங்களை ஆழமாகத் துருவி ஆய்ந்து, அப்பணிப் பொறுப்பின் வேறுபட்டதும், ஒருங்கிணைந்ததுமான உள்ளீட்டை அறியவேண்டும்.

குடும்பத்தின் பணிப் பொறுப்புக்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. குடும்பம் உறவுகளால் அமைந்ததொரு சமூகமாகத் திகழவேண்டும்.
2. குடும்பம் உயிரைப் பேணவேண்டும்.
3. குடும்பம் சமூக வளர்ச்சியில் பங்கேற்க வேண்டும்.
4. குடும்பம் திருச்சபையின் வாழ்விலும், பணிப் பொறுப்பிலும் பங்கேற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்மொழிப் பாடல்களில் சமூக எதிர்ப்புணர்வு மேலோங்கி உள்ளது!

## கவிஞர் நீலாவணன் நினைவுப் பேருரையில் கலாநிதி செ. யோகராசா

மட்டக்களப்பு வாசகர் வட்டம் நடாத்திய கவிஞர் நீலாவணன் நினைவுப் பேருரை 05, ஜனவரி 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்/மஹாஜனக் கல்லூரி புதிய மண்டபத்தில் நடைபெற்றது. முருகு. தயானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'ஈழத்து வாய்மொழிப் பாடல் பாரம்பரியம்' என்னும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ. யோகராசா பேருரை நிகழ்த்தினார்.

நாட்டார் பாடல்கள் வேறு வாய்மொழிப்பாடல்கள் வேறு என்று குறிப்பிட்ட அவர், வாய்மொழிப் பாடல்களை பல்வேறு வகைகளில் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியதோடு வாய்மொழிப் பாடல்களில் சமூக எதிர்ப்புணர்வு மேலோங்கி இருப்பதையும் குறிப்பிட்டார். இன்றும் வாய்மொழிப்பாடல் புலவர்கள் கிழக்கு மாகாணம், மற்றும் மலைநாடு போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பலர் ஆசுகவிகளாக கேட்ட உடன் பாடக்கூடிய வல்லமை உள்ளவர்களாக உள்ளனர். வாய்மொழிப் பாடல்கள் இலக்கண அடிப்படைகளைக் கொள்ளாவிட்டாலும் எளிமையும், சுவையும் புதிய சொல்லாட்சிகளும் கொண்டு விளங்குகின்றன. பலவகைப்பட்ட வாய்மொழிப் பாடல்கள் உள்ளன. சரியான கவனிப்பின்றி பல மறைந்துவிட்டன. இவை பற்றிய தேடலும், கவனிப்பும், ஆவணப்படுத்தலும் முக்கியமாகும் என்றும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் தரமான இலக்கிய நிகழ்வுகளுக்கு எப்போதும் களம் அமைத்துக் கொடுத்துவரும் மட்டக்களப்பு வாசகர் வட்டம் நடாத்திய கவிஞர் நீலாவணன் நினைவுப் பேருரை சமூக, இலக்கிய ஆர்வலருக்கு விருந்தாக அமைந்திருந்தது.

உரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கருத்துப் பரிமாறலின்போது வாய்மொழிப் பாடல்களை வாசிக்காது இசையோடு பாடி விளக்கும்போதுதான் அதன் முழுமையை, இனிமையை நாம் அனுபவிக்கமுடியும் என்று கூறப்பட்டது. அத்துடன் வாய்மொழிப்பாடல்களைத் தேடி ஆவணப்படுத்தும் முயற்சியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான கிழக்குப் பல்கலைக் கழகம் ஈடுபட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.


வழமைபோல் அல்லாது இம்முறை கவிஞர் நீலாவணன் நினைவுப் பேருரைக்கு அவரது குடும்பத்தினர் உட்பட கிழக்கு மாகாணத்தின் பிரபல எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் போன்றோர் வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

--மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



## ஒரே பாலினத் திருமணத்துக்குத் தடை

★ ஹவாய் மாநில உச்ச நீதிமன்றம் அம்மாநிலத்தில் ஒரே பாலினத் திருமணத்தை தடை செய்யும் திருமணச் சட்டத்துக்கு ஆதரவளித்திருப்பது குறித்து பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளது இம்மாநிலக் கத்தோலிக்க திருச்சபை. திருமணம் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே நடைபெற வேண்டியது என்று மாநிலத்தின் திருமணம் குறித்த சட்டம் விளக்குகின்றது. உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்மானம் குடும்பங்களுக்கான வெற்றி என்று கூறும் கத்தோலிக்க திருச்சபை, திருமணம் என்பது நீதிமன்றங்களினால் அல்ல மாறாக பொதுமக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய பொதுவான கொள்கை என்பதை நீதிமன்றத்தின் இத்தீர்மானம் தெளிவாகக் காட்டுகின்றது என்றும் குறிப்பிட்டது.

## முதல் புதுமை நடைபெற்ற இடம் புனரமைப்பு

★ ஆண்டவர் தம் பொது வாழ்வைத் தொடங்கியபொழுது முதல் புதுமையாற்றியதாகப் பரம்பரையாகக் கருதப்படும் தென்லெபனான் கோலார் குகை 2000மாம் ஜூபிலி ஆண்டையொட்டி புதுப்பிக்கப்படும் என்று ஜெனிக்ஸ் செய்தி நிறுவனம் கூறியது. இதற்கான செலவை ஏற்கும் லெபனான் அரசு இப்பகுதியை சமயம் சார்ந்த இடமென்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அறிவித்தது. விவிலிய நிகழ்ச்சியான கானாவூர்த் திருமணத்தில் வைக்கப்பட்டிருந்த ஆறு திராட்சை இரசச்சாடிகள் இக்குகையில் உள்ளன.

## லூர்துமாதா திருத்தலம்

★ பிரான்சில் லூர்துமாதா திருத்தலத்துக்கு ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 50 இலட்சம் திருப்பயணிகள் செல்லுகின்ற வேளை ஜூபிலி ஆண்டான இவ்வாண்டில் இவ்வெண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும் என்று லூர்துநகர் அயரில் பெருகும் நகரந்தந்தை அறிவித்தார். லூர்துநகர் வரும பயணிகள் உரோம் நகர செல்வதற்கும் வசதியாக ஏப்ரல் முதல் அகடோபர் வரை ஒவ்வொரு புதனும் மே முதல் செபடம்பர் வரை எல்லா ஞாயிறுகளிலும் லூர்து நகரிலிருந்து உரோமைக்கு நேரடி விமானப் போக்குவரத்து இடம்பெறுமென்றும் அயரில்பெருகும்கூறினார்

## கிறிஸ்தவ ஒன்றிப்பு

★ கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமான உறவில் வளரும்போது மகிழ்ச்சியை அனுபவிக்கும் வேளை, பிரிவினைகள் எவ்வளவு பாவமானது என்பதையும் உணருகின்றார்கள் என்று திருத்தந்தை கூறினார். இத்தாலியிலுள்ள ஜெனோவாவில் இடம்பெற்ற பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் கூட்டத்திற்கு செய்தி அனுப்பிய பாப்பிறை, மீண்டும் கண்டுணரப்பட்ட கிறிஸ்துவ சகோதரத்துவம் கிறிஸ்துவ ஒன்றிப்பு உரையாடலின் விலைமதிப்பற்ற கனியாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார். மேலும் இக்கூட்டத்தில் பங்குகொண்ட 1300 பேராளர்கள் வெளியிட்ட இறுதி அறிக்கையில் ஒருவர் ஒருவர்மீது அன்பும் மதிப்பும் கட்டாமல் இருந்த காலங்களுக்காக மன்னிப்புக் கேட்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவிகள் மன்னிப்பு

★ ஸ்பெயினில் கடந்த காலங்களில் குருக்களும், துறவிகளும் செய்த கொடுமைகளுக்கு மன்னிப்புக் கேட்டுள்ளது ஸ்பெயினின் தற்போதைய துறவிகள் அவை. 2000ம் ஆண்டு ஜுபிலி ஆண்டுக்குத் தயாரிப்பாக சுயபரிசோதனை செய்ய வேண்டும் என்று கடந்த ஆண்டுகளில் திருத்தந்தை விடுத்த அழைப்புக்கிணங்க வரலாற்றில் துறவிகள் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்பதாக இவ்வவையின் தலைவர் ஹேசுஸ்மரிய-லெஸ்வியா கூறினார். ஸ்பானிய ஆட்சியில் துறவிகள் படைவீரராய்ச் செயல்பட்டதற்கும் சமயத்தை ஒடுக்குவதற்கான ஸ்பானிய மன்றங்களில் குருக்கள் பணியாற்றியதற்கும் சிறப்பாக இவ்வவை மன்னிப்புக் கேட்டுள்ளது.

## வளங்களை அளவோடு பயன்படுத்துக!

★ இப்பூமிப் பந்தில் 130 கோடிப் பேர் கடும் வறுமையிலும் 84 கோடிப்பேர் பசிக்கொடுமையிலும் துன்புறும் நிலை இப்பூமியை புதுவிதமாய் நிர்வகிக்க வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றதென்று அமெரிக்க ஐக்கியநாட்டு உயிரியல் வல்லுநர் பீட்டர் றேகன் கூறினார். திருப்பீட அறிவியல் கழகம் நடத்திய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய றேகன் இப்பிரச்சினைக்கான முக்கிய தீர்வு பணக்கார நாடுகள் நுகர்வு வளங்களை அளவோடு பயன்படுத்துவதேயாகும் என்றார், கடந்த 50 ஆண்டுகளில் மனிதர் உலக மேல்மட்ட மண்ணில் 25 வீத பகுதியை சேதப்படுத்தியுள்ளனர். மேலும் மழைக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால் ஒருகோடி உயிரினங்கள் அடுத்த நூற்றாண்டுக்குள் அழியக்கூடும் என்ற எச்சரிக்கையையும் விடுத்தார் றேகன்.

## அல்ஜீரியாபற்றி திருத்தந்தை

★ வட ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் பிரச்சினைகள் ஒழிவதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் வெற்றிபெறும் என்ற தனது நம்பிக்கையை தெரிவித்தார் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர். அல்ஜீரியாவின் தலைவரை வத்திக்கானில் சந்தித்த திருத்தந்தை வட ஆபிரிக்கா, மத்திய கிழக்குப் பகுதி மற்றும் அல்ஜீரியாவின் நிலைமைகள் குறித்து கலந்து பேசினார். அந்நாட்டுச் சண்டையை முடிவுக்குக் கொண்டுவருவதில் பெருவாரியான மக்களின் ஆதரவை இவர் பெற்றுள்ளார். மேலும் 6000க்கும் மேற்பட்ட கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கியுள்ளார்.

## மன்னிப்புக் கேட்கவேண்டும்

★ எல்சல்வடோரில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் 6 கத்தோலிக்கக் குருக்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சியில் ஈடுபட்டதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆதரவைப்பெற்ற எல்சல்வடோர் இராணுவம் தன் குற்றத்தை ஏற்று பொதுப்படையாய் மன்னிப்புக் கேட்குமாறு அந்நாட்டு இயேசுசபை பல்கலைக் கழக அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். சென் சல்வடோர் இயேசு சபையினரின் பல்கலைக்கழகத்தில் 1989ம் ஆண்டு நவம்பர் 16ம் நாள் ஆறு இயேசு சபைக் குருக்கள், பணிப்பெண் மற்றும் அவளது மகளை இராணுவத்தினர் படுக்கையிலிருந்து இழுத்துவந்து சுட்டுக்கொன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம்பாடி ஒலிபரப்புச் சேவை கத்தோலிக்க நிகழ்ச்சி இணைப்பாளர் மறைவு

நாட்டின் வடபகுதிக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்தும் வானம்பாடி ஒலிபரப்புச் சேவையுடன் இணைந்து கத்தோலிக்க நிகழ்ச்சித் தொடர் பாளராக பணியாற்றிவந்த திரு. அன்ரனி மரியதாஸ் கடந்த டிசம்பம் 31ம் திகதியன்று துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட் டார்.

வவுனியா, இறம்பைக்குளம் புனித அந் தோனியார் ஆலய வளாகத்துள் டிசம்பர் 31ம் திகதி நள்ளிரவு ஆராதனைக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் - இடம்பெற்ற இந்நிகழ்வு அனை வரையும் அதிர்ச்சிக்கும், கவலைக்கும் உள் ளாக்கியது.

இனந்தெரியாதோரால் நடாத்தப்பட்ட இப்படுகொலைக்கு ஆளான அன்ரனி மரிய தாஸ் மூன்று பிள்ளைகளுக்கு தந்தையாவர். ஊடகத் துறையில் பணியாற்றுவதையே தனது பெரும் இலட்சியமாகக் கொண்டு ஏறத்தாள பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இத்துறையில் பணியாற்றிவந்த இவ ரது மறைவுக்கு எமது ஆழ்ந்த துயரத்தை யும், அஞ்சலியையும் தெரிவிக்கிறோம்.

அமைதியும், புனிதமும் நிறைந்த ஆலயச் சூழல் போர் நடவடிக்கைகளுக்கும், வன் முறைகளுக்கும் இலக்காகி வருவது வருந்தத் தக்கது மட்டுமல்ல கண்டிக்கத்தக்கதும்கூட. ஆனாலும் இந்நிலை இந்நாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வருவதையே நாம் காணமுடி கிறது. ஆலய வளாகத்துக்குள் நடைபெற்ற இவ்வநியாயச் செயலைக் கண்டித்து வவுனி யாவில் குருக்கள் தலைமையில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது. மக்களின் இதுபோன்ற துணிச்சலான எதிர்நடவடிக்கை கள் மூலமே வருங்காலத்திலும் இத்தகைய துயர நிகழ்வுகள் இடம்பெறாது ஓரளவா வது தடுக்கமுடியும். ஆலயங்களையும், அதை அண்மித்த சூழலையும் அவமதிப்புக்குள்ளாக் காது பாதுகாப்பதை அனைத்துத் தரப்பின ரும் ஒரு விதியாகக் கொள்ளவேண்டும்,

ஆலயங்கள் ஆண்டவனை வழிபடும் இடமாக மட்டுமல்ல போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும், பாது காப்பும் தரும் இடங்கள் என்றே பலராலும் நம்பப்படுகின்றன; அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மக்களை அழித்தொழிக்கும் யுத்தத்தில் ஈடு பட்டுள்ளவர்கள் இவற்றை எல்லாம் கருத் தில் கொள்வார்கள் என்று நாம் எப்படித் தான் எதிர்பார்க்க முடியும்! மனித வாழ்வை நாசமாக்கும் யுத்தத்துக்கு முடிவு கட்டாத வரை இந்நாட்டில் நாம் எதையுமே பாது காக்க முடியாது என்பதே எதார்த்தம்.

— மலர்

16ம் பக்கத் தொடர்ச்சி .....

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற் றுள்ள திரு. செல்லத்துரை ஜெயராஜா அவர்கள் தமது படைப்பாக்க முயற்சிகளிலி ருந்து இன்னும் ஓய்வு பெறவில்லை. இவரது பிள்ளைகளும் வானொலி நாடகங்களில், நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு வருவது குறிப் பிடத்தக்கது. ஆற்றலும், அர்ப்பணிப்பும் மிக்க நமது கலைஞர் ஒருவருக்கு தொண்டன் தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறிக்கொள்கிறது

-- மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய பொது அறிவுப் போட்டி - 45

1. 'உண்மையில் நான் கேள்விப்பட்டதை விஞ்சிவிட்டீர்' என்று சாலமோன் அரசனைப் பாராட்டியவர் யார்?

..........................................................................................................

2. ''உம் உறவினருள் இப்பெயர் கொண்டவர் எவரும் இல்லையே'' இவ்வசனம் யாரைக்குறித்துக் கூறப்பட்டது?

..........................................................................................................

3. ''இரவு முடியப் போகிறது பகல் நெருங்கி உள்ளது'' நம்பிக்கை ஊட்டும் இவ்வசனம் திருமுகங்களில் எந்தப் புத்தகத்தில் எத்தனையாம் அதிகாரம் வசனங்களில் உள்ளது?

..........................................................................................................

4. சங்கீத மும்மூர்த்திகளில் முதல்வராகக் கருதப்படுபவர் யார்? அவரது காலம் என்ன?

..........................................................................................................

5. முதன் முதலாக இருதய மாற்று சிகிச்சை செய்த தென்னாபிரிக்க மருத்துவரின் பெயர் என்ன?

..........................................................................................................

6. அண்மையில் நடந்த கிரிக்கட் டெஸ்ட் போட்டி ஒன்றில் ஒரு இனிங்ஸில் இரட்டைச்சதம் அடித்த இரண்டாவது இலங்கையர் யார்?

..........................................................................................................

பெயர் ..........................................................

முகவரி ..........................................................

..........................................................

.......................................... இங்கே வெட்டவும் ..........................................

### போட்டி விதிகள்

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 29-02-2000

முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 45,

தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய - பொது அறிவுப் போட்டி - 43 முடிவுகள்

**விடைகள்:**

1. யோபு 2. ஆபிரகாம் செல்வந்தருக்குக் கூறியது 3. கலாத்தியர் 6/9
4. எட்டாவது 5. சமாதான ஆண்டு 6. கபச்சுரப்பி (Pituitary)

**பரிசு பெறுவோர்!**

ரூபா 100/- — பரிசுக்கு எவரும் தெரிவாகவில்லை.

ரூபா 75/- — பிரகாஸ் பெர்னான்டோ,
1, எல்லை வீதி தெற்கு,
தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.

ரூபா 50/- — வே. க. இக்னேசியஸ்,
156/40B, கடற்படைத்தள வீதி,
திருகோணமலை.

ரூபா 25/- — கே. எஸ். மனுவேல்
பெரிய கல்லாறு - 1, கல்லாறு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். - இ. ஆ.

15ம் பக்கத் தொடர்ச்சி......

மரணமொன்று நிகழ்ந்ததற்கு அடையாளமே இல்லாத அந்த வீடும், சூழலும் அவனுக்குப் புதியவையே. தூரத்தில் எங்கோ வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன. புத்தாயிரமாண்டு பிறந்திருக்க வேண்டும். சிறுவன் மரக்குற்றியில் சலனமற்று உறங்கிப்போனான்

விடியாத இவர்களின் பொழுதுகளில் அந்தப் புத்தாண்டுகூட இன்னும் புறப்படத் தயங்கிக்கொண்டிருக்கும். இந்தக் குடிசையும் காடும்மட்டும் அவர்களுக்கு நிரந்தரமாகிப் போகும்.

### உரிமை

★ நாம் பயன்படுத்தாத காலணிகள் வெறுங்காலுடன் நடப்பவருக்குரியவை.

★ நாம் குடியிருக்காமல் கட்டிவைத்திருக்கும்வீடுகள் வீடற்றவர்களுக்கு உரிமையானவை.

★ நாம் உழாமல் சேர்த்துவைத்திருக்கும் நிலங்கள் உழுவோருக்கு உரிமையானவை.

★ நாம் பயன்படுத்தாமல் அலுமாரியில் வைத்திருக்கும் ஆடைகள் வறியோருக்கு உரிமையானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானத்திற்குச் செலவு 5208 கோடி

2000ம் ஆண்டில் யுத்தத்திற்காக 5208 கோடி ஒதுக்கியிருப்பதாக பத்திரிகை அறிக்கை கூறுகிறது. அதேவேளை அரசாங்கத்திற்காக சமாதான பாதயாத்திரை, சமாதானத்தியானம் சமாதானப்பாடல்கள் ஒ(லி)ளி பரப்பு, என்பனவும் நடைபெறுகிறது. மதத் தலைவர்கள் அரசசார்பற்ற குழுக்கள் யுத்தத்திற்கு ஏற்படும் செலவை நிறுத்துங்கள் என்று கூறுவதைக் காணோம்.

யுத்தத்திற்கு கோடிக்கணக்கில் செலவு செய்ய இடம் அளிப்பதும், சமாதானம் பற்றிக் கதைப்பதும் பயங்கரமான கேலிக் கூத்தாகும்.

யுத்தச் செலவை நிறுத்தச் சொல்லாமல் சமாதான பாதயாத்திரை செல்வது யுத்தத்திற்குச் செய்யும் பெரிய உதவியாகும்.

- நன்றி. ஒளியை நோக்கி -

## மீண்டும் வாரும் யேசுவே

இருண்ட உள்ளத்தில்
ஏற்றிடு தீபத்தை
தணலாலல்ல இயேசுவே – உன்
அன்புக் கனலாலே
உயிருள்ள பிணமானேன்
எழுப்பிடு என் ஜீவனை
பேச்சினாலல்ல இயேசுவே – உன்
மூச்சினால்
வறண்ட நிலத்தில் உலர்ந்த
செடியானேன்
ஊற்றிடு உன்னீரை
மீண்டும் முளைக்கும் பூவாவேன்
உன்னை நேரில் காணத்
துடிக்கிறேன். நீ ஏன்
கனவில் கூட உன்முகத்தை
மறைத்துக் கொள்கிறாய்?

R. தேவகுமாரி.
பாலையூற்று.

## எமது வாழ்வு

அன்பான இயேசுவே
உன் அன்பு வாழ்வை
நாம் வாழ்கிறோமோ
என்னவோ
ஆண்டுகள் இரண்டாயிரமாகியும்
உன் அகதி வாழ்வை மட்டும்
அரசின் புண்ணியத்தால்
அடிக்கடி வாழ்கிறோம்

அகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள் – தமிழ்
## பெப்ரவரி – மார்ச் 2000

நாள் : 12, 13, 14, 15
நேரம் : *காலை 5. 50 மணி*
**-கத்தோலிக்க நற்சிந்தனை-**
வழங்குபவர் : **அருள்.சகோ.சேவியர் ரஜீவன்**

நாள் : 16,17, 18
நேரம் : *காலை 5. 50 மணி*
**-கத்தோலிக்க நற்சிந்தனை-**
வழங்குபவர்: **மெற்றில்டா இராஜேந்திரம்**

நாள் : 20,
நேரம் : *மாலை 7.00 மணி*
**-புதிய உலகம்-**
**நேர் காணல்**
**அன்பியம் தொடர்பாக**
**அருள் தந்தை F.X. டயஸ்**

நாள் : 22
நேரம் : *மாலை 7. 45 மணி*
**-சிறுவர் உலகம்-**
*திருமறை வினாவிடைப் போட்டி*
*பங்குகொண்டோர்*
*மட்/ புனித திரேசா பெண்கள் பாடசாலை*
*மட்/ புனித மரியாள் இணைப் பேராலயப் பங்கு*

நாள் : 26, 27, 28, 29
நேரம் : *காலை 5. 50 மணி*
**-கத்தோலிக்க நற்சிந்தனை-**
வழங்குபவர் : **அருள் தந்தை இக்னேஸ் ஜோசப்**

நாள் : 01, 02, 03
நேரம் : *காலை 5. 50 மணி*
**-கத்தோலிக்க நற்சிந்தனை-**
வழங்குபவர் : **முத்தையா செல்வராணி**

நாள் : 05
நேரம் : *மாலை 7.00 மணி*
**-புதிய உலகம்-**

நாள் : 07
நேரம் : *மாலை 7. 45*
**-சிறுவர் உலகம்-**

நாள் : 11, 12, 13, 14
நேரம் : *காலை 5. 50 மணி*
**-கத்தோலிக்க நற்சிந்தனை-**
வழங்குபவர்: **போதகர் J. L. இம்மானுவேல்**

தொகுப்பு : **மலர்வேந்தன்**
தொடர்பு : **த. பெ. எண் – 44 மட்டக்களப்பு. 30000.**

WANASINGE PRINTERS, BATTICALOA.
Cover Printed By: St. Joseph's Catholic Press, Batticaloa.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org